## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

## அ.வ.எண்.201/2011

19.07.2018

**பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**
**12 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

தாவாச் சொத்தில் என் தகப்பனார் லோகநாதன் கிரயம் பெற்ற சொத்தை பொது அதிகாரம் கொடுத்து மனையிடங்களாகப் பிரிவினை செய்து விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்திற்கு தென்புறத்தில் ரீ.ச.எண்.93/3, 93/4 ஆகிய உட்பிரிவுகளில் எனக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். நான் அந்த சொத்துக்களை 27.09.2010 தேதியில் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். நான் தாவாச் சொத்தை ஒரு பகுதியை கிரயம் பெற்றபோது தாவாச் சொத்தில் கூட்டுச் சுவாதீனத்தில் இருந்ததா என்றால் இல்லை. நான் கிரயம் பெறுவதற்கு முன்பாகவே ரீ.ச.எண்.92/5 ல் ஒரு பகுதி சொத்தானது நத்தக்காடையூர் கிராமம், ஓடக்காட்டில் வசிக்கும் பொன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரீ.ச.எண்.92/5 ல் பொன்னுச்சாமிக்கு பாத்தியப்பட்ட பூமிகளை 12,13 பிரதிவாதிகள் கடந்த 23.02.2005 ல் குறிப்பிட்ட செக்குபந்தியில் கண்டு கிரயம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பூமிகளை உட்பிரிவின் அடிப்படையில் 12, 13 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் பல வருடங்களுக்கு முன்பே வாய்மொழி பாகக்கரார் ஏற்பட்டு அதன் அடிப்படையில் ரீ.சர்வேப்படி உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் வாதிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களின் பேரிலும் தனிப்பட்ட உட்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 93 ஏக்கர் 27 செண்ட் ஆகும். அதேபோல் ரீ.ச.எண்.92/5 பி காலையில் சிக்காம்பாளையத்தில் இருக்கும் கருப்பணகவுண்டருக்கு பொதுவில் சரிபாதி பாத்தியம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி கருப்பணகவுண்டரிடமிருந்து 12, 13 பிரதிவாதிகள் உட்பிரிவுப்படி கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். ரீ.ச.எண்.92/5 காலையில் உள்ள பு.ஏ.4.64 ½ யும் ரீ.ச.எண். 92/5 பி காலையில் பு.ஏ.2.32 ¼ விஸ்தீரண பூமியும், 12, 13 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

நான், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் உட்பிரிவுகளின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறோம். நானோ, வாதிகளோ மற்ற பிரதிவாதிகளோ தாவா சொத்தை ஒருபோதும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**